கொதிகலன்கள் இயக்குநர், தமிழ்நாடு, பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை - 5 அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை - திரு சு.கணேசன், எம்.டெக்.,
கொதிகலன்கள் இயக்குநர்

-------

செயல்முறை எண். கொபி4 / 517 / 2020 (ந.ப.3வ), நாள்.23.05.2020.

பொருள் : பணியமைப்பு - தமிழ்நாடு அமைச்சப் பணித் தொகுதி - திரு ரா. யுவராஜ், கொதிகலன்கள் இயக்குநர் அலுவலகம், தமிழ்நாடு, சென்னை-05 - இளநிலை உதவியாளர் பதவியில் 08.03.2019 முற்பகல் அன்று பணியில் சேர்ந்தது - இளநிலை உதவியாளர் பதவியில் 08.03.2019 மு.ப. முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை : 1.முதன்மை தலைமைப் பொறியாளர்(நீ.ஆ.அ) மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொ.ப.து., சென்னை, செயல்முறை எண். எஸ்.3(3)/25366/2019/நாள்.25.02.2019.
2.இவ்வலுவலக செ.மு.எண். பணி/1021/2019-1/நாள்.07.03.2019.
3.இவ்வலுவலக கடித எண். கொபி-1/1021/2019 நாள். 15.03.2019

------

பார்வை 1-ல் கண்ட முதன்மை தலைமைப் பொறியாளர் (நீ.ஆ.அ) மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப் பணித்துறை, சேப்பாக்கம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால், தொகுதி IV பணியின் கீழ் 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018-ஆம் ஆண்டிற்கு தேர்வு செய்து, பார்வை 2-ல் கண்ட இவ்வலுவலக செயல்முறை ஆணையின் வாயிலாக, இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளராக மறு பணியமர்வு செய்யப்பட்ட திரு ரா. யுவராஜ், இளநிலை உதவியாளர் பதவியில் தமிழ்நாடு சார்நிலை பணித்தொகுதி 23ஏ-ன்படி பணியில் சேர்ந்த 08.03.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர்ச்சியாக தகுதிகாண் பருவம் முடிப்பதற்கு துறைத் தேர்வுகளாகிய மாநில அலுவலக நடைமுறை தேர்வு, பொதுப்பணித்துறை அரசு அலுவலர் மற்றும் சார்நிலை அலுவலர்களுக்கான தேர்வுகளில் பாகம் 1 மற்றும் பாகம் 2-லும் தேர்ச்சி பெற்று சான்றிதழும் பெற்றிருக்க வேண்டும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

அதனை தொடர்ந்து தங்களது தகுதிகாண் பருவத்தினை பணிவரன்முறை படுத்தப்பட்ட நாள் முதல் துவக்கியதாக கருதப்படுகிறது. அந்நாளிலிருந்து தொடர்ச்சியான மூன்றாண்டு தொடர் பணிகாலத்தில் இரண்டாண்டு பணியினை நிறைவு செய்ய வேண்டும் எனவும் ஆணை வழங்கப்படுகிறது.

23/5/20

கொதிகலன்கள் இயக்குநர்,
தமிழ்நாடு, சென்னை-5.

23/5/20

பெறுநர்
திரு. ரா. யுவராஜ், இளநிலை உதவியாளர்
கொதிகலன்கள் இயக்குநர் அலுவலகம், சேப்பாக்கம், சென்னை-05.

நகல் - கொதிகலன்கள் இயக்குநர், சேப்பாக்கம், சென்னை-05.
நகல் - பணிப்பதிவேட்டிற்கு.
நகல் - பதிவறை எழுத்தர் - (திரு - தன் கோப்பிற்கு)